[1971 டிசம்பர் 14

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கோவில்பட்டியில் பருத்தி அபிவிருத்தி சாகுபடித் திட்டத்தின் கீழ் 1970-71 ஆண்டில் ரூ. 1,06,326.53 செலவு செய்யப்பட்டது.

(இ) இத்திட்டம் ஒரு சேவை புரியும் திட்டமாகும். இத் திட்டத்தின் மூலம் பருத்தி விவசாயிகள் மானுவாரி பகுதியில் சிறந்தவகைப் பருத்தியை உற்பத்தி செய்யவும், திருந்திய சாகுபடி திட்டத்தைக் கடைப்பிடிக்கவும், நாட்டின் உற்பத்திக்கும் தேவைக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை நீக்கவும், ஒவ்வொரு ஏக்கராவிலும் அதிக விளைச்சலை உண்டாக்கவும் சேவை செய்யப்பட்டு வருகிறது. எனவே இத் திட்டத்தின் மூலம் அரசுக்கு வரவு எதும் இல்லை.

திரு. எம். முத்தையா: தலைவரவர்களே, பருத்தி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் எத்தனை வகைப் பருத்திகள் இருக்கின்றன? அதில் எது உயர்ந்த ரகம்?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இது பற்றி ஆராய்ச்சி தான் நடந்துகொண்டிருக்கிறது. ஆராய்ச்சி முடிவடைந்து முழு விவரங்கள் கிடைத்தவுடன் இதைச் சொல்ல முடியும்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவரவர்களே, பருத்தி ஆராய்ச்சிச் செய்வதாகச் சொன்னார்கள். இதில் கலர்ப் பருத்தி உற்பத்திச் செய்ய முயற்சி செய்யப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இல்லை.

New variety of mangoes

* 383 *Q.*—THIRU K. S. KOTHANDARAMIAH: Will the **Hon. the Minister for Agriculture be pleased to state—**

(*a*) whether it is a fact that a new variety of mango has been evolved as a result of cross between the Madras Neelam and Lucknow Desehri; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) & (இ) புது டில்லியிலுள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனத்தில் நீலம், தாசரி இவற்றுக்கிடையே ஒட்டு செய்ததன் விளைவாகப் புதியவகை மாஞ்செடி ஒன்று தோற்றுவிக்கப்பட்டுள்ளது. "சென்னை நீலம்" என்றோ "லக்னோ தாசரி" என்றோ பெயருடைய வகைகள் எவையும் இல்லை; மாறாக "நீலம்" "தாசரி" என்ற வகைகள் மட்டுமேயுள்ளன. புதுடில்லியிலுள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் மாஞ்செடி ஒட்டு ஆராய்ச்சிப்

1971 டிசம்பர் 14]

பணி, 1961-இல் தொடங்கப்பட்டது. அங்கு கீழ்க்கண்ட மூலவகை இணைகளைக் கொண்டு அவற்றுக்கிடையே ஒட்டுச் செய்யப்பட்டது. அவையாவன :—

தாசரி × நீலம் ; நீலம் × தாசரி

நீலம் × லங்கா ; தாசரி × தோதபுரி சிவப்பு சிறியது.

தாசரி × பங்களூரா, சௌஸா × நீலம்

நீலம் × சௌஸா.

இந்த இணைகளின் ஒட்டு மரங்கள் 1968-இல் கனிகள் ஈந்தன. இவற்றில் பின் வரும் மூலவகை இணைகள் நான்கிலிருந்து கிடைத்த ஒட்டுவகைகள், காயின் நரத்திலும் வழக்கமாய் கிடைக்கும் பலன் அளவிலும் சிறப்பாகவுள்ளனவென்று தெரிவிக்கப்படுகின்றது. அவையாவன:—

தாசரி × நீலம் ; நீலம் × தாசரி

நீலம் × சௌஸா, தாசரி × தோதபுரி.

இந்த ஒட்டுவகைகளின் பலன்கள் பரிசோதனையில் உள்ளன.

Thiru K. S. KOTHANDARAMIAH : Sir, about four or five months ago I read in a North Indian News Paper. " The Patriot " about it and details had been given in it. Now I do not have the details about it. So, May, I know from the Hon. Minister whether such seedlings would be what is the exact name of the cross bread?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இவ்வளவு நேரம் சொன்னதே ஒட்டு இனத்தைப் பற்றித்தான். பெரியகுளத்தில் செய்யப்படும் கே.ஓ. 8, கே.ஓ. 22, தஞ்சையில் பாதிரி, சேலத்தில் சேலம் பங்களூரா, வரகம்பாடி குண்டு . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாட்டில் உள்ள வகைகளைப் பற்றியெல்லாம் கேட்கப்படவில்லை. சென்னை, சேலம் ஒட்டு இனத்தைப்பற்றித்தான் கேட்டார்கள். அதற்குமட்டும் பதில் சொன்னால் போதும். அது சொல்லியாகிவிட்டது.

தீவிர கரும்பு சாகுபடித் திட்டம்.

*384 வினு—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு வேளாண்மை துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தீவிர. கரும்பு உற்பத்தித் திட்டத்துக்காகச் சில பகுதிகளை அரசு தேர்ந்தெடுத்துள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பகுதிகளை அரசு தேர்ந்தெடுத்துள்ளது?